## தமிழ்நாட்டின்
# மக்களோடு மக்களாகும் மாமுதல்வர்! எக்காலும் ஆள்வார்!



வியத்தொறும் வியத்தொறும் வியப்பே! வியப்பே!
நயத்தகும் பாசம்! நறுந்தேன் அன்புக்
குடத்தேன் மொய்க்கும் தேனீக் கள்போல்
நடந்தே வீதி நாயகர் செல்கையில்
பேணும் மக்களோ பெரிதும் நெகிழ்ந்து
மாணும் மகிழ்ச்சி கரைபுரண் டோடிடக்
காணும் காட்சியோ கண்கொளாக் காட்சி!
நாணும்! கைமாறு கருதா மேகமும்!
நினைத்தவர் நினைத்ததைக் கேட்டவர் கேட்டதைத்
தனையே ஈகம் தமிழ்நாடு வாழ
**செய்மா முதல்வர் இஸ்டாலின் எம்கோ**
**மெய்செயற் கோபோல்** மேதினி உண்டோ?
மக்களொடு மக்களாய் மாமுதல்வர்!



**எக்காலும் ஆள்வார்** என்பதும் உறுதியே!
பெருங்கவிக்கோ **வா.மு.சேதுராமன்**
உலக அமைப்பாளர், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்.

'திராவிட மாடல்' ஆட்சியைப் பறைசாற்றும் வகையில்
தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பாக

# 38 மாவட்டங்களில் கல்லூரி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள்!

## ஆணையத் தலைவர் சி.ஜோ.அருண் அறிவிப்பு!

சென்னை, ஜன. 25 -

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் சி.ஜோ.அருண் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் மூலம் கடந்த 2024 ஆம் ஆண்டு திராவிட மாடல் ஆட்சியினை பறைசாற்றும் விதமாக பல்வேறு தலைப்புகளின் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) கீழ் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட கல்லூரி மாணவ /மாணவியர்கள் பங்கு பெற்றனர். இதில் மாநில அளவில் தேர்வு பெற்ற முதல் மூன்று மாணவ/மாணவியர்களுக்கு தலா ரூ.1,00,000/, ரூ.50,000/, ரூ.25,000/ என வழங்கப்பட்டன. எனவே, இவ்வாண்டும் (2025) பேச்சுப் போட்டி (தமிழ் மற்றும் ஆங்கிலம்) நடைபெறவிருப்பதால் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கல்லூரி மாணவ/மாணவியர்கள் தங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மாவட்ட பிற்ப டுத்தப்பட்டோர் அலுவலகத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நல மேற்கண்ட பேச்சுப்போட்டி (தமிழ் மற்றும் ஆங்கிலம்) விழா ஏற்பாட்டிற்கு பேராசிரியர் முனைவர். ஜெ. ஹாஜாகனி (தமிழ்த்துறை தலைவர்) காயிதே மில்லத் கலைக்கல்லூரி, பேராசிரியர் ஜெ. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், BE., MBA., MCA., ML., Ph.d., ஆசிரியர், (தி ரைசிங் சன் ஆங்கில இதழ்) அவர்களை ஒருங்கணைப்பாளர்களாக இருந்து பணியாற்றுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு ஆணையத் தலைவர் சி.ஜோ.அருண் தெரிவித்துள்ளார்.

---

சிவகங்கை கல்லூரி மாணவிகளின் கோரிக்கை!

# உடனடியாக நிறைவேற்றிய முதல்வருக்கு மாணவிகள் நன்றி!

சிவகங்கை, ஜன. 25 -

கடந்த 21 , 22 ஆகிய இரண்டு தினங்கள் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தார். 22ஆம் தேதி காரைக்குடியில் இருந்து சிவகங்கையில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் பங்கேற்க கார் மூலமாக சிவகங்கை வருகைபுரிந்தார்.

வழியில் சோழபுரம் தனியார் கல்லூரி மாணவிகள் முதல்வரை வரவேற்க கூடியி ருந்தனர். மாணவிகளை பார்த்ததும் காரை நிறுத்தி முதல்வர் அவர்கள் அளித்த வரவேற்பினை ஏற்றார். மாணவிகளை நன்றாக படிக்குமாறு அறிவுரை கூறினார் .

அப்போது முதல்வரிடம் மாணவிகள் தங்கள் கல்லூரி முன்பாக பேருந்து நின்று செல்லவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.சோழபுரம் பேருந்து நிறுத்தத்தில் இருந்து தொலைதூரம் நடந்து கல்லூரிக்கு வரவேண்டி உள்ளதாக கூறினார்கள்.

அது குறித்து நடவடிக்கை எடுப்பதாக முதலமைச்சர் மாணவிகளிடம் கூறினார். சிவகங்கையில் அரசு நிகழ்ச்சியில் முதல்வர் பங்கேற்ற நேரத்தில் சோழபுரம் கல்லூரி மாணவிகள் கோரிக்கையினை ஏற்று கல்லூரி முன்பாக பேருந்து நிறுத்தம் பலகை அரசு போக்குவரத்து கழக அலுவலர்களால் வைக்கப் பட்டது.

பேருந்துகள் நின்று செல்வதையும் போக்குவரத்து அலுவலர்கள் கண்காணித்தனர். கல்லூரி மாணவிகளின் கோரிக்கையை உடனடியாக நிறை வேற்றிய முதல்வருக்கு மாணவிகள் நன்றி தெரிவித்தார்கள்.

---

தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை

# மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம், 30-01-2025 வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில், எனது தலைமையில், துணைத் தலைவர்கள் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், எம்.பி., எம்.ஆர்.ஆர்.வாசுவிக்ரம் - செயலாளர்கள் மா.உமாபதி, அர.திருவிடம், இறையன்பன் குத்தூஸ், வண்ணை அரங்கநாதன், என்.தில்லைசெல்வம் - துணைச் செயலாளர்கள் சி.வீரகணேசன், கவிஞர் நன்மாறன், எழில்மாறன் செல்வேந்திரன், மீனா ஜெயக்குமார், சி.கோபி, ஜாகிர் உசேன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

பொருள்: 1. பிப்.18 அன்று திருவாரூர் கலைஞர் கோட்டத்தில் நடைபெற உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா, 2. கழக ஆக்கப்பணிகள் - குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.1.2025

**வாகை சந்திரசேகர்**
தலைவர்
கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை

---

# செந்தழல் மறவர்க்குச் செய்வோம் வீர வணக்கம்!

கற்காலம் முன்பிருந்தே
கடல்தோன்றும் காலமுதல்
முற்பிறந்த தமிழ்மொழி
முச்சங்கம் கண்டமொழி
பொற்பான இலக்கியப்
புதையலைக் கொண்டமொழி
விற்பன்னர் ஆக்கிய இலக்கண
விதிமொழி!
தெற்கிருந்து வடக்குவரை
திசையெலாம் திகழுமொழி!

கற்பதற்கு எளியமொழி
கழறுதற்கு இனியமொழி
கொற்றங்கள் ஆண்டமொழி
குமரியாம் அழகுமொழி
இற்றைக்கும் உலகத்தில்
இயங்குகின்ற
மூத்தமொழி!
விற்புலி கயல்கொண்ட
வேந்தர்கள் பூண்டமொழி!
சுற்றுகின்ற புவிக்கோளில்
தோன்றிய முதல்மொழி!
எற்றைக்கும் இளமைமொழி,
எப்பொருளும் உணர்த்துமொழி!
மற்றைய மொழிகளும்
மணிவயிறு உதித்தமொழி;
புற்பூண்டு முளைக்காமுன்
புவியிலே பூத்தமொழி!
நெற்பொலியும்
தமிழ்நாட்டின்
நீண்டநெடுங் காலமொழி
ஒற்றைமொழி தனித்தியங்கும்
உயராற்றல் பெற்றமொழி
தற்கால மொழிகளுக்குத்
தலைமொழி; கலைமொழி!
உற்றமொழி வழக்குஎழுத்து
ஒப்பிலாது உடையமொழி;
செற்றரை அழித்தமொழி,
செம்மொழியாய்ச் செழித்தமொழி!

நற்கோல மொழி,எங்கள்
நற்றமிழ் காப்பதற்கு
விற்கோலம் பூண்டெழுவோம்,
விரட்டுவோம் இந்தியை!

பெற்றெடுத்து வளர்க்காத
பெரும்பேயாய் ஆடுமொழி,
பிற்றைமொழி, பழம்பெருமை
பெரும்புதுமை இலாமொழி
கற்றைமொழி சந்தையில்
கண்டமொழி கதறுமொழி
புற்றெடுத்த கரையானாய்ப்
புறப்படும் இந்திமொழி
சற்றுமிங்கே வாராமல் தடுத்திடுவோம்;
எப்போதும்
முற்றுகை இட்டிடுவோம்
முறியடித்து ஓட்டிடுவோம்!
வெற்றுரை அல்ல,பெரும்
வீரத்தால் விளம்புமுரை!
அற்றது திணிப்பிங்கே,
ஆர்த்தெழுவோம்,
போர்தொடுப் போம்;
தொற்றுமொழி வெற்றுமொழி
தொலைத்திடுவோம் என்றெழக்
கற்கோட்டை அசைந்தது,
கல்லூரி பள்ளிகள்
மற்கோட்டம் ஆயின
மாநிலம் எங்கணும்!
புற்கூட்டம் வீழ்ந்தது;
புதுப்புரட்சி நிகழ்ந்தது!

தாக்கவரும் இந்திதான்
தானைபல கூட்டிவர
நீக்குதற்கு, தடையிட்டு
நிறுத்துதற்கு வழியென்று
தீக்குள்ளே எரியவிட்டார்
தேக்குமரம் போலவே,
யாக்கைகள் தீய்ந்தாலும்
இன்னுயிர் மாய்ந்தாலும்
பூக்கமழ் மணத்தினும்
புதுமணம் கொண்டதமிழ்
காக்கவே பிறப்பெடுத்தோம்,
கனலிலே இறப்புடுத்தோம்!

சாக்காடும் எங்களுக்குச்
சந்தனப் பூச்சுதான்;
பூக்காடும் ஆகுமே,
புனலாறு போலுமே,
வேக்காடும் இனியபல
வீணைப்பாட்டு ஆகுமே,
நோக்காடும் உணர்ச்சிமிகும்
நோன்பாகும் சாவுமே!
ஈக்களும் அண்டாத
இரும்புடல்; எங்களின்
நோக்கமே இந்தியெனும்
நுணல்மொழித் திணிப்பினைத்
தேக்கமே இல்லாமல்
திண்மையாய் எதிர்ப்பதே!

## பேராசிரியர் மா.செல்வராசன்

ஆக்கந்தான் தமிழ்க்கெனில்
ஆர்வமாய் ஆருயிரும்
போக்குவோம், அனலிலே பொசுங்குவோம்,
அதனாலே ஊக்குவோம் தமிழரிடம்
உரிமைப்போர் கிளப்புவோம்,
மாக்களாம் தில்லிதான்
மறத்தமிழர்
மதிக்காமல்
ஏய்க்கலாம் எனநினைத்தால
எரிமலை ஆகும்தீ
மாய்க்கலாம் அவர்களை,
மாற்றலாம் வரும்நாளில்
பூக்கலாம் தமிழாட்சி
பொற்காலம் ஆகலாம்!

பெரியார்தீ மூட்டிடப்
பெருங்கனல் அண்ணாவால்
எரிதீயாய் மாறியது,
எங்கெங்கும் பரவியது!
உரிமைக்குக்
குரல்கொடுத்து
உருவாகும் கிளர்ச்சிகள்!
அரிமாக்கள் வரிப்புலிகள்
அடலேறாம் மாணவர்கள்
கரிபூசி அழித்தனர்,
கட்டாய இந்தியை
வரவிடோம் என்றனர்;
வஞ்சினம் பூண்டனர்!
உரந்தந்த கலைஞரை
ஒருதனிமைச் சிறையிடப்
பரந்தெழுந்த போராட்டம்
பாரினைக் கலக்கியது!

இரந்திங்கே கெஞ்சிடோம்,
இறுதிவரை துஞ்சிடோம்,
கரந்திங்கே இந்திதான்
கால்வைக்க ஏற்றிடோம்!

விரட்டுவோம் என்கின்ற
விண்குரல் எழுந்தெங்கும்
நிரந்தரம் ஆயிற்று;
நீக்கியது ஆட்சியை!
வரந்தந்தாற் போல்மக்கள்
வழங்கினர்
அண்ணாவின்
கரங்களில் ஆட்சியை!
கட்டாய இந்திக்கு
நிரந்தர விடைதந்து
நீக்கினார்! கலைஞரோ
இருந்தவரை இந்திக்கோர்
இம்மியும்
இடம்தராமல்
புரந்தனர் செந்தமிழை!
புரிந்தநல் ஆட்சியைத்
தரமாகக் காக்கின்ற
தளபதியும் இந்திமொழி
ஒருநாளும் தமிழ்நாட்டின்
உள்நுழைய விடமாட்டோம்,
இருமொழிக் கொள்கையே
என்றென்றும் நிலைக்குமெனத்
திருமொழி புகல்கின்றார்;
செந்தமிழ் போற்றுகின்றார்!
மறுமொழி இதற்கேது?
மாவீரம் எழும்போது!

இந்தியாவின் ஆட்சிமொழி
ஏராளம் பேர்பேசும்
இந்திதான் என்றொருநாள்
எதிர்ப்பினைப் புறந்தள்ளித்
தந்திரமாய்ச் செய்தசட்டம்
தமிழுக்கும் தமிழர்க்கும்
தந்திடும் தாழ்வெனத்
தலைவர்கள் புலவர்கள்
அந்தநாள் முதலாக
ஆர்ப்பாட்டம் போராட்டம்
சிந்தனைப் பேச்சுகள்
சிறைப்படல் மறியலென
எந்தவிதம் எதிர்த்தாலும்
இறுமாப்பாய் ஒன்றியம்
இந்தியைத் திணிப்பதே
இலட்சியம் என்றலையைச்
செந்தமிழ்க்கு எதிராகச்
சின்னமொழி யாளன்று
செந்தீயில் குளித்தவர்கள்
தியாகநாள்!தமிழர்கள்
சொந்தமொழி காத்திடச்
சுட்டெரித்துக் கொண்டோரை,
பந்தபாசம் எல்லாமே
பைந்தமிழ்மேல் வைத்தோரை
சொந்தமும் குடும்பமும்
துளியேனும் நினையாரை
வெந்தழலில் எரிகின்ற
வேளையிலும் வீரமுடன்
செந்தமிழ் வாழ்கவென்றும்
செம்மொழி வாழ்கவென்றும்
இந்திதான் ஒழிகவென்றும்
ஈனமொழி வீழ்கவென்றும்
முந்துகுரல் எடுத்தோரை
முழக்கங்கள் செய்தோரை
அந்திபகல் இரவுடன்
அலர்காலை முழுநாளும்
சிந்தனையில் இருத்தவேண்டும்,
தீரத்தைப் போற்றவேண்டும்!

இந்திமொழித் திணிப்பிங்கே
இல்லாமல் வெல்வதே
வெந்தொளிரும் மறவர்க்குச்
செயும்வீர வணக்கமாம்!

---

ஆவணக் கண்காட்சி – கருத்தரங்கம் – கவியரங்கம் – விருதுகள் வழங்கும் விழா!

# மும்பை - லெமுரியா அறக்கட்டளை நடத்தும் தொல்காப்பியத் திருவிழா!

## சு.குமணராசன் தலைமையில் - கோ.பாலச்சந்திரன் - டாக்டர் சேது குமணன் - தமிழறிஞர்கள் பங்கேற்பு!

நவிமும்பை, ஜன. 25 -

மகாராஷ்டிரா மாநிலம், நவி மும்பை, நவி மும்பை, தமிழ்ச் சங்கத்தில் மும்பை இலெமுரியா அறக்கட்டளை நடத்தும் தொல்காப்பியத் திருவிழா- இரு நாள் நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

இதில் தொல்காப்பிய ஆவணக் கண்காட்சி, கருத்தரங்கம், கவியரங்கம், மாணவர் அரங்கம், விருதுகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

மராட்டிய மாநில மேனாள் காவல்துறைத் தலைவர் த.சிவானந்தன் தலைமையில் முதன்மை விருந்தினர்களாக மேற்கு வங்க மேனாள் தலைமைச் செயலாளர் கோ. பாலச்சந்திரன், மராட்டிய மாநில நிதித்துறை செயலாளர் டாக்டர் ந. இராமசாமி, மும்பை காவல்துறை இணை ஆணையர் சு. ஜெயகுமார், காரைக்குடி சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி & ஆராய்ச்சி நடுவம் தலைவர் டாக்டர் சேது குமணன் ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்கின்றனர்.

இன்று (25.01.2025) காலை 10 முதல் 12.45 மணி வரை அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்தலும் 'தொல்காப்பியம் ஆவணக் கண்காட்சி' திறந்து வைத்தலும் நடைபெறுகிறது. அத்துடன் தொல்காப்பிய ஆவணப் படம் திரையிடப்பட்டு, தமிழிசை - பரத நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

மேலும் மும்பை, கோரேகான் தமிழ்ச்சங்கம் கே. ஆர். சிறீனிவாசனுக்கு 'தொல்காப்பியர் விருது - 2024' வழங்கப்படுகிறது.

முனைவர் மு. இளங்கோவனின் 'தொடரும் தொல்காப்பிய மரபு' என்ற நூலும், சு.குமண ராசனின் 'கிளாசிக் தமிழ் லிட்ட ரேச்சர் - எப்ரீப் இன்ட்ரொடக்சன்' என்ற ஆங்கில நூலும் வெளியிடப்படுகின்றன.

பிற்பகல் 2 மணி முதல் 3.45 வரை இசை அரங்கம், மாணவர் அரங்கம், மேடை முழக்கம், மாணவர்களின் பேச்சுப் போட்டி, தனித் தமிழ்ப் பேச்சுப் போட்டி நடைபெற்று பரிசுகள் வழங்கப்படுகின்றன.

மேலும், மாலை 4 மணி முதல் 6.30 மணி வரை நடைபெறும் இந்நிகழ்ச்சியில் எம்.முருகேசன், சிவகுமார், இராமச்சந்திரன், சிவ. நல்லசேகரன், கண்ணன் இராமச்சந்திரன், பா. சங்கர் ராஜ், கே.வி. அசோக் குமார், இரா. அந்தோணி, ஆர். கோபால கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்க, மேற்கு வங்க கூடுதல் தலைமைச் செயலாளர் கோ. பாலச்சந்திரன் விருதுகள் வழங்கி வாழ்த்துரை வழங்குகிறார்.

இதில் திராவிடவியல் மறுமலர்ச்சி மய்ய நிறுவுநர் ஜே. இரவிக்குமார் ஸ்டீபன், முனைவர் வளனறிவு ஆகியோர் பங்கேற்கின்றனர். திருமதி நங்கை குமணராசன் நன்றியுரை கூறுகிறார்.

இரண்டாம் நாள் 26.1.2025 காலை 9.30 மணி முதல் இசைப் பாடல்கள், எட்டுத் தொகை கவியரங்கம் நடைபெறுகிறது. கவிஞர் இசாக் வரவேற்புரையில், புதுச்சேரி, முனைவர் மு. இளங்கோவன் தலைமையில், மும்பை அன்பழகன் பொற்கோ, புனே தமிழ்ச்சங்கம் முனைவர் சத்திய நாராயணன், வனிதா இளங்கோவன், ஜேம்ஸ் தேவதாசன், வதிலை பிரதாபன், இல. முருகன், வேலு மயில் நயினார், சு.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில்.

### எட்டுத் தொகை கவியரங்கம்

கவிஞர் புதிய மாதவி - பரிபாடல், இறை ச. இராசேந்திரன் - கலித்தொகை, கவிஞர் இராசு மாதவன் - அகநானூறு, பிரவினா சேகர் - பதிற்றுப் பத்து, வெங்கட் சுப்பிரமணியன் - நற்றிணை, கவிஞர் வ.ரா. தமிழ் நேசன் - குறுந்தொகை, கவிஞர் நெல்லை பைந்தமிழ் - புறநானூறு, புலவர் கார்த்திகாயினி - ஐங்குறுநூறு ஆகியோர் எட்டுத்தொகை கவிபாடுகின்றனர்.

### தலைவர்கள் பெயரில் விருதுகள்!

மேலும் இலெமுரியா அறக்கட்டளை சார்பில் திருவள்ளுவர் விருது - மீனாட்சி வெங்கடேசன், வழக்கறிஞர் க. கணேசன், தந்தை பெரியார் விருது - பெ. கணேசன், சாலமோன் ராஜா, பெருந் தலைவர் காமராசர் விருது - எம். எஸ். காசிலிங்கம், அருட்தந்தை எம்.ஏ. சூசை, பேரறிஞர் அண்ணா விருது - இறை ச. இராசேந்திரன், கவிஞர் வ. இரா. தமிழ் நேசன், அண்ணல் அம்பேத்கர் விருது - எஸ். அண்ணாமலை ஸ்ரீதர் தமிழன், அப்துல் கலாம் விருது - முகைதீன் பிச்சை, மா. அருண், புரட்சிக் கவிஞர் விருது - முத்துமணி நன்னன், புலவர் கார்த்திகாயினி, அன்னை தெரசா விருது - மஞ்சுளா கதிர் வேல், சுமதி மதியழகன், கலைவாணர் என்.எஸ்.கே. விருது - க. நந்தகோபால், கி. வெங்டேசு, சீர்வரிசை சண்முக ராசன் விருது - ஜான் சாமுவேல், வதிலை பிரதாபன், டி.எம்.எஸ். விருது - ஆர்.டி. இராஜன், டி.எம்.எஸ். நரசிம்மன், கலைஞர் நூற்றாண்டு விருது - ம.சேசுராசு ஆகியோருக்கு வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சிகளில் மேலும் அரங்க. மல்லிகா, அ. ரவிச்சந்திரன், வளர்மதி கணேசன், அமலா ஸ்டான்லி, சுவாமிப் பிள்ளை உட்பட இலெமுரியா அறக்கட்டளை தன்னார்வலர்கள் ஆ. பாலசுப் பிரமணியன், முத்தமிழ் தண்டபாணி, இரா.இராசேந்திரன், அ. கண்ணன், மா. மதன் லால், இரா. சுரேசு, மா. மரியராஜ், அழகு ராஜா உள்பட பலர் கலந்து கொள்கின்றனர்.

பெங்களூரு தமிழ் அறக்கட்டளை திருமதி சுவேரியா தகிசீன் நன்றி கூறுகின்றார்.